# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை – 04 | 16–04–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை – 058



படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9440)
R.V
பந்தல் சேவை,
நர்மபுரம்.


## தமிழ்த்தேசியம் என்ற நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக நின்றவர் நீலன்

### – லெப்.கேணல் நீலனுக்கு நியூட்டன் புகழாரம்

(அலுவலக செய்தியாளர்)

துரோகி கருணாவின் பிரதேசவாதத்துக்கு துணைபோகாது எமது தலைவரின் உறுதியான தலைமைத்துவத்தின் மீது உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற இறுதிவரை உழைத்ததனால் தான் மட்டக்களப்பு மாவட்டத்தின் புலனாய்வுத்துறைத் துணைப் பொறுப்பாளர் நீலன் கருணாவால் சுடப்பட்டார். இவ்வாறு விடுதலைப்புலிகள் உறுப்பினர் நியூட்டன் தெரிவித்துள்ளார். கருணாவால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு (IVஆம் பக்கம் பார்க்க)

## தளபதிகள், பொறுப்பாளர்கள், மக்கள் பெருமளவானோர் நீலனுக்கு அஞ்சலி

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பில் துரோகி கருணாவால் துரோகத்தனமாக கொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறைத் துணைப் பொறுப்பாளர் லெப்கேணல் நீலன் அவர்களின் வித்துடல் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என பெருமளவானவர்களின் வீரவணக்கத்துடன் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்து கடந்த 12ஆம் திகதி கருணாவால் சுட்டுக் கொல்லப்பட்ட நீலன் அவர்களின் வித்துடல் மட்டக்களப்பிலிருந்து நேற்றைய தினம் வன்னிக்கு கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு எடுத்துவரப்பட்ட லெப்.கேணல் நீலன் அவர்களின் வித்துடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் மக்கள் அஞ்சலிக்காக நேற்றுமாலை மூன்று மணிக்கு (IVஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை முன்னெடுக்க வாய்ப்பில்லை

# அப்பாதையை விட்டு அரசு கீழிறங்கி நிற்கிறது

### பாதுகாப்புத்துறை ஆய்வாளர் ஹரிகுணதிலக்க

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையிலிருந்து சிறிலங்கா தற்சமயம் கீழிறங்கி நிற்கிறது. அத்தோடு புதிய அரசாங்கத்தின் நிலையைக் கொண்டு விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் வாய்ப்பில்லை என்றும் கருத வேண்டியுள்ளது என்று கொழும்பு பாதுகாப்புத் துறை ஆய்வாளரான ஹரி குணதிலக்க தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாண பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள போதும் இனப்பிரச்சினைக்கான இணக்கப் பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இல்லை என இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சினையை தகர்த்து கடந்த திங்கட் கிழமையன்று மீண்டும் அங்கு தமது (IVஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுக்கள் பொறுப்பேற்பு இல்லை

## சு.க. – ஜே.வி.பி. விரிசல் தொடர்கிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரசியலில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.க்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்கள் நேற்றும் அவர்களால் பொறுப்பேற்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக டக்ளஸ் தேவானந்தா, பேரியல் அஷ்ரப், லக்ஷ்மன் கதிர்காமர், ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே உட்பட ஆறு அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்றை சனாதிபதி அமைத்துள்ளார். இக்குழு நேற்று முன்தினம் ஜே.வி.பி.யைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தது. நேற்றும் சந்திப்பு நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தும் அது கைகூடவில்லை. (IVஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் இருந்து கொழும்பிற்கு இராணுவ வாகனங்களில் கருணாகுழு

### – அரசியல் வாதி ஒருவரும் உடனிருந்தார்

கருணா கடந்த திங்கட் கிழமை பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாக நேற்றைய ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கருணாவும் மற்றும் 20 பேரும் பொலநறுவையில் இருந்து 6 இராணுவ வாகனங்களின் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாக நேரில் கண்டோர் தெரிவித்துள்ளனர். இவர்கள் இரவு 10 மணிக்கும்,11 மணிக்கும் இடையிலான நேரத்தில் தம்புள்ளையில் அமைந்துள்ள விருந்தகம் ஒன்றில் இரவு ஆகாரம் உட்கொண்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். அரசியல்வாதி ஒருவர் இவர்களுடன் வந்ததாகவும் (IVஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்ற புலிகள்-இராணுவம் சந்திப்பில் முடிவு

மட்டு. மாவட்டத்தில் புலிகள்-இராணுவத்தினர் புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்றுவது என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இருதரப்பும் மதித்துச் செயற்படுவது என்றும் முடிவு செய்துள்ளனர்.

நேற்றைய சந்திப்பின் போதே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளுக்கும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் மட்டு. வவுணதீவில் இடம்பெற்றது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறாவ்கோவ்டே தலைமையில் யுத்தசூனியப் பிரதேசமான மட்டக்களப்பு வவுணதீவுப்பிரதேச செயலக மண்டபத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி றமேஸ் மட்டு- அம்பாறைத்தளபதி ராம், மட்டு- அம்பாறை அரசியல் (IVஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றக்குழு நாளை கூடுகிறது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை இடம் பெறவுள்ளதுசனாதிபதி இதற்கு தலைமை தாங்கவுள்ளதாக கட்சித் தரப்புகள் கூறுகின்றன. இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினரும் அழைக்கப் (IVஆம் பக்கம் பார்க்க)

### – முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு செயலாளர் –

## வாழைச்சேனை, மின்னேரியா படைமுகாம்களுக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் மற்றும் முப்படைத் தளபதிகளும் நேற்று வாழைச்சேனைக்கும் மின்னேரியாவிற்கும் விஜயம் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைகள் ஆராயப்பட்டன. அதேநேரம் இரண்டு இடங்களிலும் அமைந்துள்ள இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரிகளுடனும் கொழும்பில் இருந்து சென்ற பாதுகாப்பு உயரதிகாரிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.(32)

## யாழ். பொலிஸ் நிலையம் மீது இனம் தெரியாதோர் கல்வீச்சு

### – பொலிசார் சரமாரியான துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையம் மீது இனந்தெரியாதோர் குழு ஒன்று கல்வீச்சு நடத்தியுள்ளது. இதனால் விழிப்படைந்த பொலிசார் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

மேற்படி பொலிஸ்நிலையத்திற்கு முன்பாகவுள்ள வீதியால் சம்பவ நேரத்தில் வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த இனம் தெரியாத குழு ஒன்று பொலிஸ் நிலையம் மீது திடீர் கல் வீச்சு நடத்திவிட்டுத் தப்பி ஓடியுள்ளது. இதனால் விழிப்படைந்த பொலிசார் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (33)





லெப். கேணல் நீலனின் வித்துடலுக்கு அவரது மனைவி ஈகச் சுடர் ஏற்றுவதையும், வித்துடல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதையும், விசுவமடு துயிலும் இல்லத்திற்கு வித்துடல் எடுத்துவரப்படுவதையும் படங்களில் காணலாம்.

## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த வெண்ணிலா திரையரங்கம் 12/04/2004 திங்கள் முதல் கரடிப்போக்கு கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை திரைப்பட ரசிகர்களுக்கு அறியத்தருகின்றோம்.
நேசன் உரிமையாளர். (சி.9372)

### தவறிவிட்டது

வனதாஸ் உதயராஜ் ஆகிய எனது அ.அட்டை இல.831914122v கிளிநொச்சிக்கும், புதுக்குடியிருப்புக்கும் இடையில் 14.04.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புது.ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4076)

* * * * * * * * * * * * * * *

12.04.2004 நேற்று கோவிந்தன் கடைச்சந்திக்கும் கிளி மகாவித்தியாலயத்திற்கும் இடையில் சின்னையா பேரின்பநாதன் என்பவருடைய அடையாள அட்டையும் நிரந்தர பயண அனுமதி அட்டையும் பேசுடன தொலைந்துவிட்டது. எடுத்தவர்கள் சேரன் வாணிபத்திலோ அல்லது சேரன் பணிமனையிலோ ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.(4433)

## உந்துருளி பதிவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கடந்த வருடம் நவம்பர் மாதம் பதிவு மேற்கொள்ளப்பெற்ற ஆவணங்கள் தவறவிடப்பெற்ற உந்துருளி (மோட்டார் சைக்கிள்) களுக்கான ஒரு தொகுதி பதிவுச்சான்றிதழ்கள் கிளிநொச்சி மோட்டார் வாகனப்போக்குவரத்து உதவி ஆணையாளர் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி சான்றிதழ்களை கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் எதிர்வரும் 24ஆம் திகதியன்று காலை 9.30 மணிக்கு மாவட்ட அரச செயலகத்தில் வைத்து வைபவ ரீதியாக உரியவர் களிடம் வழங்கிவைக்கவுள்ளார். சான்றிதழ் வழங்கப்பெறவுள்ள உந்துருளி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பெற்றுள்ளதெனவும் அன்றைய தினம் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ள உந்துருளி உரிமையாளர்கள் சமுகம் கொடுத்து பதிவுச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட மோட்டார் வாகனப்போக்குவரத்து உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமி வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.ச)

## கட்டாக்காலி நாய்களால் மக்கள் தொடர்ந்தும் பாதிப்பு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளால் மக்கள் வீதிகளில் சென்று வருவதற்கு அஞ்சி வருகின்றனர்.

மல்லாவி 4ஆம் யூனிட் பகுதியிலும் பிரதான பொதுச்சந்தை பகுதியிலும் கட்டாக்காலி நாய்களினால் சிலர் கடியுண்டும் உள்ளனர்.

மல்லாவி நகர்ப்பகுதியில் மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு சென்று வரும் போதும் இரவு நேரங்களில் சென்று வரும் போதும் கட்டாக்காலி நாய்களினால் துரத்தப்படுகின்றதனால் சிறு காயங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இதில் உந்துருளியில் வருவோர் நடந்து வருவோர் எனப் பலர் நாய் கடிக்கும் இலக்காகின்றனர்.(24)

## நற்செய்தி கருத்தரங்கு

நாள் :– 19.04.2004 (திங்கட் கிழமை)
நேரம் :– மாலை – 4.30 தொடக்கம் 6.30 வரை
இடம் :– கருணாநிலையம், கிளிநொச்சி (காவல்பணிமனைக்குமுன்பாக
நற்செய்தியாளர் :– சகோதரன் பிரடிஜோசப் (இந்தியா)

இக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றுச் செல்லுமாறு அனைத்து மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபைக்குருவானவர்
தூயபவுலின். ஆலயம்,
கருணாநிலையம், கிளிநொச்சி.

(4441)

## கிளி/பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் திருவிழா

சனி மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழா (17.04.2004) ஞாயிறு காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி (18.04.2004) அனைவரையும் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும்
பங்குமக்களும், தருமபுரம்.

(4438)

## கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி

## முக்கிய அறிவித்தல்

கரைச்சிப்பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் இயங்கும் பரந்தன் நகரப்பகுதியில் சந்தைக்கு அருகாமையில் சபையினால் வாகனத்தரிப்பிடம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந் நடைமுறை எதிர்வரும் 17.04.2004ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகின்றதென்பதையும் வாகனச்சாரதிகளும் ஏனையோரும் இதனை அனுசரித்து நடக்கும்படியும் வாகனத் தரிப்பிடத்தைப் பாவித்து விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி-9446)

## உந்துருளிகள் இயலவிற்பனை

### (ஏலவிற்பனை)

இயங்கும் நிலை/உதிரிகளாக்கும் நிலை
பார்வையிடும் காலம் :- 15,16,17/04/2004.
இயலம் விடப்படும் காலம் :- 20/04/2004.
நேரம் :- காலை 10.00மணி
இடம் :- உடைமைப்பகுதிப் பணிமனை
வேணாவில்,
புதுக்குடியிருப்பு.

குறிப்பு:- கேள்விக்கான கட்டணம்-ரூபா-200/=

(சி-7183)

## வழக்கு தாக்கல்

(கொழும்பு)

தென்மாகாண அமைச்சர் ரஞ்சித்தின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களென கருதப்படுகின்ற 06 சந்தேக நபர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பாதாளக்குழுவைச் சேர்ந்த ஒருவரும் இராணுவத்தை விட்டு விலகிய ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

## உளமார பாராட்டி வாழ்த்துகிறோம்

பரந்தன் தபாலகம் அதன் கட்டுப்பாட்டு உபதபாலகங்களிலும் பல வருடங்களாக தற்காலிக தபால் சேவகர்களாக கடமைபுரிந்த எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி எமது ஒளிமயமான நல்வாழ்வுக்கு வழிசமைத்த தபால் திணைக்களத்தைச் சேர்ந்த வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் திரு.வி.குமரகுரு, யாழ்ப்பாணம் நிர்வாக உத்தியோகஸ்தர் திரு.எஸ்.சிவராஜசிங்கம், வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி திரு.என்.ஜெயரட்ணம் ஆகியோருக்கும் அவர்களின் அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

தபாலக ஊழியர்
நலன்புரிச் சங்கம்
பரந்தன்

(சி.9447)

## நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் திணைக்களத்தினரால் நாளையும், நாளைமறுதினமும்நடமாடும் சேவைகள் மூலம் கண்டாவளைப்பிரதேச செயலர் பணிமனையில் வைத்து காலம் கடந்த இறப்பு பிறப்பு மற்றும் இடம் பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த காலப்பகுதிகளில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு என்பனவற்றின் பதிவுகள் மேற்கொள்ளப்பட ஏற்பாடாகியுள்ளது. அன்றைய தினங்களில் கண்டாவளை பிரதேசத்தில் மேற்படி பதிவுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கு சமுகங் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கண்டாவளைப் பிரதேசச் செயலர் சி.சிவசொருபநாதபிள்ளை வேண்டியுள்ளார். (சோ.ச)

## அறிவித்தல்

*வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் செய்முறைப்பரீட்சை.*

2004.04.15ஆந் திகதி ஆரம்பிக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி பரீட்சை 2004.04.20.ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் இடமும் காலமும் அடங்கிய அட்டவணை பின்வருமாறு.

| பாடம் | காலம் | இடம் |
|---|---|---|
| நடனம் | 20 .04.2004 தொடக்கம் 24 .04. 2004 வரை. முற்பகல் 9.00-பி.ப 4.00 | கிளி/கனகாம்பிகைக்குளம அ.த.க.பாடசாலை |
| சங்கீதம் | 20.04.2004 தொடக்கம் 22.04.2004 வரை முற்பகல் 9.00-பி.ப 4.00 | கிளி/கிளிநொச்சி ம.வி |
| நாடகமும் அரங்கியலும் | 04.05.2004 முற்பகல் 9.00-பி.ப 4.00 | கிளி/கிளிநொச்சி ம.வி |
| மிருதங்கம் | 04.05.2004. 05.05.2004 ஆகிய இரு தினங்கள் மு.ப.9.00 மணி தொடக்கம் நடைபெறும். | கிளி/கிளிநொச்சி ம.வி |

*மு. சின்னராசா,*
*பிரதிக்கல்விப்பணிப்பாளர்,*
*கிளிநொச்சி.*

(சி-9448)

## சாவு அறிவித்தல்

### சோமசுந்தரம் குமாரசாமி

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் இல.26 கட்சன் வீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சோமசுந்தரம் குமாரசாமி 14.04.2004 அன்று காலமானார். அன்னார் பத்மாவதியின் அன்புக்கணவரும் சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்றதம்பிஜயா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலம் சென்றவர்களான செல்லத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) பொன்னம்மா, செல்லாச்சி, மனோன்மணி, புவனேஸ்வரி, கந்தசாமி, செல்வநாயகம், (பேராசிரியர் யாழ்.பல்கலைக்கழகம்), நல்லதங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார் (நோர்வே), சூரியகுமாரி (வட்டக்கச்சி), புனிதகுமாரி (வவுனியா), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், நகுலேஸ்வரி (வட்டக்கச்சி), கலாநிதி (சுவிஸ்), செல்வநிதி (ஜேர்மன்), புவனேஸ்வரன் (சுவிஸ்), கிருஷ்ணகுமார் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), செல்வரஞ்சன் (வட்டக்கச்சி), தயாநிதி (வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகுதந்தையும், வனஜா(ஆசிரியர் நோர்வே), சொக்கலிங்கம், அருணகிரிநாதன் (லண்டன்), சிவலிங்கம் (வட்டக்கச்சி), சிவதாசன் (சுவிஸ்), நாகேஸ்வரன் (ஜேர்மன்), சுபாசினி (சுவிஸ்), புஸ்பலதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஜிதரன் (யாழ்.பல்கலைக்கழகம் கலைப்பீடம்), ரஜீவன் (யாழ். பல்கலைக்கழகம் மருத்துவபீடம்) ஜானுகா, சிந்துஜன் (லண்டன்), சாருஜன், தபோஜினி, துசாந்தன், டிலைக்சன், ஹரிசன், ஆரபி, ரிஷி, ஜெனா, ஜெனுசன், செந்தூரன், சுயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 18.04.2004 அன்று மம்மில் இந்து மயானத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் : மனைவி,மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4440)

## குடும்பநல உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஆட்சேர்ப்பு -2004.

வடக்கு -கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் தமிழ்மொழிமூல குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களை (மருத்துவமாதர்) பயிற்றுவிப்பதற்கான விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

ஜி.சி.ஈ.(சா/த) பரீட்சை அல்லது அதற்குச் சமனான பரீட்சை,ஏதாவது ஒன்றில் இரு தடவைகள் தோற்றி ஆறு பாடங்களில் பெற்றுள்ள சித்திகளுடன்அவற்றில் ஒரு தடவை ஐந்து பாடங்களில் தமிழ் அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், இன்னுமொரு பாடத்திலும் நான்கு திறமைச்சித்திகளுடன் இருத்தல் வேண்டும்.

இதற்கு விண்ணப்பிப்பவர் 2004 சித்திரை 25ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன் 4 அடி 10 அங்குலத்துக்கு குறையாதவராகவும், விவாகம் செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்ப படிவங்களையும், அறிவுறுத்தல்களையும் கிளிநொச்சியில் இயங்கும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.9445)

# கருணாவை மட்டக்களப்பிலிருந்து வெளியேற்றி தேசியத் தலைவர் யார் என்பதைக் காட்டியுள்ளார்

## மூத்த உறுப்பினர் கரிகாலன்

(லண்டன்)

கடந்த பல நாட்களாக ஊடகங்களுக்கு "தீனி" போட்டுக் கொண்டிருந்த கருணாவை மட்டு. மாவட்டத்திலிருந்து வெளியேற்றியதன் மூலம் தேசியத் தலைவர் யார் என்பதை அகில உலகுக்கு அறிவித்துள்ளதாக விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவித்தார்.

தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை நிருபித்திருப்பதாகத் தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து சர்வதேச செய்தி ஊடகம் வெளியிட்ட கருத்துதீ தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, தேசியத் தலைவரை எதிர்த்தவர்கள் எவருமே வெற்றி கண்டதில்லை என்பதை மீண்டும் ஒரு முருமுறை நிலை நாட்டியிருக்கின்றார் எனத் தெரிவித்த கரிகாலன், ஊடகங்கள் இவ்வளவு காலமாக கருணாவுக்கு ஆதரவாகவும், தமிழ் தேசியத்திற்கு எதிராகவும் பரபரப்பான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. இந்த செய்திகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளிவைத்து விரைவாகத் தீர்வு கண்ட தேசியத் தலைவரின் ஆற்றலை அகில உலகமும் ஏற்று நிற்கின்றது என்பதைத்தான் இந்த செய்தி எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை, கருணா விவகாரம் தொடர்பாக விரைவான தீர்வை கண்ட தமிழீழத் தேசியத் தலைவருக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறுமாறு புலம் பெயர்ந்துள்ள ஈழத் தமிழ் மக்கள் தனக்குத் தெரிவித்துள்ளதாகக் கரிகாலன் தெரிவித்தார்.

இதன் போது தமிழீழத் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழ் மக்களிடம் கரிகாலன் கேட்டுக் கொண்டார்.

சிறிலங்காவில் தற்போது முழுமையாக நாங்கள் விடுதலை பெறக் கூடிய சூழல் இல்லாத அரசியல் நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் நாங்கள் சேர்ந்துபோய் இருக்க முடியாது. தீர்வுவரும் என நாங்கள் எதிர்பார்க்கவும் முடியாது.

ஏனெனில், ஒரு ஸ்திரமான அரசு இல்லாத காரணத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது கேள்விக் குறியாக இருக்கின்ற நிலையில் நாங்கள் சோர்ந்துபோய் விடாது அமைதிவரும் என்று எதிர்பார்த்து நம்பிவிடாது தொடர்ந்தும் எங்கள் உரிமைக்காகப் போராடுகின்ற போராட்ட பலத்தை வளர்க்கின்ற கைங்கரியத்தில் ஈடுபட வேண்டியவராக இருக்கின்றார். ஆகவே, எமது தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவதற்கு புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் அணி திரண்டு ஒருங்கிணைந்து தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவதற்கு உழைக்க வேண்டும் என கரிகாலன் அவர்கள் புலம்பெயர்ந்த மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

# 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழ் வெளிவருகின்றது

(அலுவலகசெய்தியாளர்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' கலை இலக்கிய சமூக இதழ் பல புதிய விடயங்களுடன் வெளிவருகிறது.

ஐம்பத்திபாறு பக்கங்களில் வெளிவரும் இந்த இதழில் தமிழீழ தேசியத்தலைவரின் கருத்துரையுடன் ந.சத்தியபாலன் திசோரா, நேசன், ஞானரதன் முல்லைமணி ஆகியோரின் கட்டுரைகளும் மாலிகா, த.அகிலன், பொன்காந்தன், த.ஜெயசீலன், வேலவன், கோபால்நாதன், புதுவை இரத்தினதுரை, கருணைரவி, சோதியா, கல்வயல் வேகுமாரசாமி, இத்தாவில் க.சிவராசா ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் முத்து இராதாகிருஸ்ணன், முல்லை ஜேசுதாசன், யோ.கர்ணன், ச.முருகானந்தன், தேஜோமயன், சிவாஜினி சிவசங்கர் ஆகியோரின் சிறுகதைகளும் சோபத்மநாதனின் மொழிபெயர்ப்பும் மற்றும் தூது அஞ்சலிக்குறிப்புகளும் இந்த இதழில் உள்ளன. இது வெளிச்சத்தின் ஐம்பத்தி ஐந்தாவது இதழ் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஊர்காவல் துறையில் படையினரின் சோதனை நடவடிக்கைக்கு ஆட்சேபம்

யாழ். ஊர்காவல்துறை தம்பாட்டிப்பகுதியில் பொலிசாரும் படையினரும் தமது ரோந்து மற்றும் சோதனைகள் விசாரணைகளிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி மேற்படி பகுதியில் பொலிசாரும் ஈ.பி.டி.பி.யினரும் இணைந்து மககள் மீதும் போராளிகள் மீதும் தாக்குதல் நடத்தி யதையடுத்து அப்பகுதி மக்கள் நடத் திய பதில் தாக்குதலில் 4 ஈ.பி.டி.பி. யினரும் காயமடைந்தமை தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து படையினரும் பொலிசாரும் தமது ரோந்து நடவடிக்கைகள் மற்றும் மக்கள் மீதான விசாரணைகள் மற்றும் சோதனைக்கெடுபிடிகளையும் நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு ஈ.பி.டி.பி. யினருடன் இணைந்து படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அப்பகுதிப்பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

# கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கியதாக வெளிவந்த செய்தியில் உண்மையில்லை!

## சிறில. பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான மோதலின் பின்னர் கருணாவிற்கு சிறிலங்கா இராணுவம் பாதுகாப்பு வழங்கியதாக உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. கருணா இதுவரை சிறிலங்கா இராணுவத்தினிடம் பாதுகாப்புக் கோரி எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை என்றும் அந்தச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கருணா தொடர்பாக எந்தப்பொறுப்புக்களையும் பாதுகாப்பு அமைச்சு ஏற்றுக்கொள்ளவில்லை. கருணா மற்றும் அவரது முக்கிய சகாக்கள் தற்போது எங்கேயுள்ளார்கள் என்பது குறித்தும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எந்தத்தகவலும் தெரியாது எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தம்பலகமம் மருத்துவமனைக்கு

# நிரந்தர மருத்துவர்களை நியமிக்கக் கோரி மக்கள் மருத்துவமனைமுன் மறியல்

(திருகோணமலை)

தம்பலகமம் மாவட்ட அரசாங்க மருத்துவமனைக்கு நிரந்தரமாக மருத்துவர்களை நியமிக்குமாறு கோரி பொதுமக்கள் மருத்துவமனை முன்பாக நேற்றுக் காலை எட்டு மணி தொடக்கம் மறியல் செய்தனர். மருத்துவமனை நுழைவாயிற் கதவுகள் இழுத்து மூடப்பட்டிருந்தன நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்மருத்துவமனையில் இரண்டு மருத்துவர்கள் நிரந்தரமாக சேவையாற்றி வந்தனர். இவர்களில் ஒருவர் பெப்ரவரி 27 தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டார். இரண்டாமவர் விடுமுறையில் செல்லவே, தம்பலகமம் மருத்துவமனை ஏப்ரல் 11 தொடக்கம் மூடப்பட வேண்டியதாயிற்று. ஊர் மக்கள், பொது அமைப்புக்கள் இது பற்றி முறையிட்டும் பதில் மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு நிர்வாகம்நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்துப் பொது மக்கள் மறியல் போராட்டத்தை நேற்று நடத்தினர்.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் உடனடியாக மருத்துவமனைக்கு நேரில் சென்ற வேளை மாகாண சுகாதார உயரதிகாரி வைத்தியகலாநிதி இ.குணாளன் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கத்துக்கு உடனடியாக மருத்துவர் ஒருவரை நியமிப்பதில் உள்ள கஷ்டங்களை விளக்கினார்.

மேலும் மருத்துவமனைக்கு நிரந்தரமாக மருத்துவர்களை நியமிப்பது தொடர்பாக புதிய சுகாதார அமைச்சரை கொழும்பில் சந்தித்து பேசி நடவடிக்கை எடுப்பதாக பொதுமக்களுக்கு உறுதியளித்தார். நண்பகல் அளவில் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. (25)

## இரணைமடுக்குளத்தின் கீழுள்ள

# கழிவு வாய்க்கால்கள், வயல் வீதிகளில் விதைப்போருக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கையினை மேற்கொள்பவர்கள் கழிவு வாய்க்கால்கள் மற்றும் வயல் வீதிகளை அத்துமீறி விதைப்புக்குட்படுத்துபவர்கள் உடன் அதனைக் கைவிட வேண்டும். தவறின் அவர்களுக்கான சிறுபோக நெற் செய்கைக்கான நீர்ப் பங்குகள் வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு நேற்று கிளி. மாவட்ட செயலக மண்டபத்தில் அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் வைத்து தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப் பெற்ற தீர்மானத்திற்கமைவாக இரணைமடுக் குளத்தின் கீழ் விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாயிகளை ஒத்தாசை நல்கும் வண்ணம் அரச அதிபர் வேண்டுகை விடுத்துள்ளதுடன் இதற்கமைவாக திட்டக் குழுக்கள் நடவடிக்கைகளை செயற்படுத்தும் வண்ணமும் வேண்டியுள்ளார். (சோ,ச)

# யூதக்குடியேற்றங்கள் சிலவற்றை அகற்றும் இஸ்ரேலின் திட்டத்துக்கு புஷ் பாராட்டு

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியிலிருந்து ஒரு தொகுதி யூதக் குடியேற்றங்களை அகற்றிக் கொள்ளும் இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் நேற்று முன்தினம் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஸ்சை சந்தித்து பேசியபோதே அவர் இந்த திட்டத்திற்கான பாராட்டை தெரி வித்தார்.

இஸ்ரேல் பிரதமரின் திட்டம் சரித்திர முக்கியத்துவம் மிக்கதும் துணிகரமானதுமென அமெரிக்க சனாதிபதி புஸ் கூறியுள்ளார். பலஸ்தீன ராஜ்ஜியத்தை உருவாக்கும் விடயத்தில் தமது அர்ப்பணிப்பை சனாதிபதி புஸ் மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் எதிர்கால பலஸ்தீன ராஜ்ஜியம் மேற்குக் கரைப்பிரதேசத்தை முழுமையாகஉள்ளடக்கியிருக்கும் சாத்தியத்தை புஷ் நிராகரித்துள்ளார். 1967ஆம் ஆண்டு போர் மூலம் இஸ்ரேல் கைப்பற்றிய மேற்குக் கரை நகரின் சில பகுதிகள் இஸ்ரேலுக்கு உரிமை யானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேசமயம் அமெரிக்க சனாதிபதியின் இந்தக் கருத்துக்கு பலஸ்தீன பிரதமர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்கப் பொதுத்தேர்தலில் ஆபிரிக்கத் தே.கா. அமோக வெற்றி

(ஜெகனர்ஸ் பேர்க்)

தென்னாபிரிக்காவில் ஆளும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளது

இதன்மூலம் முதன்முறையாகத் தென்னாபிரிக்கப் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலத்தையும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் பெற்றுக் கொண்டது.

வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த 21 மில்லியன் வாக்காளர்களில், 80 வீதமானவர்கள் வாக்களித்ததாகவும் இந்த தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றதாகவும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இதில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் 67 வீத வாக்குகளை பெற்று முதன்முறையாக பாராளுமன்றில் அறுதிப் பெரும்பான்மை பலத்தையும் பெற்றுக் கொண்டது. இதன்மூலம் அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ள ஆபிரிக்க தேசியக் காங்கிரஸிற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

சனநாயக முன்னணிக்கு 16 வீத வாக்குகளே கிடைத்துள்ளன.

# ஈராக்கில் கடத்தப்பட்ட இத்தாலியர் ஒருவர் சுட்டுக்கொலை

ஈராக்கில் ஆயுதக் குழுவொன்றினால் கடத்தப்பட்டிருந்த இத்தாலியர்களில் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஈராக்கிலிருந்து இத்தாலியப் படையினரை திரும்பப்பெறாவிட்டால் தம்மிடம் பணயக்கைதிகளாக உள்ள மேலும் மூன்று இத்தாலியர்களையும் கொலை செய்யப்போவதாக மேற்படி ஈராக்கிய ஆயுதக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்டிருந்த நான்கு இத்தாலியர்களில் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடத்தப்பட்ட ஐந்து ஜப்பானியர்களில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய மக்களவைக்கான

# ஐந்தாம் கட்டத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று ஆரம்பம்

(சென்னை)

இந்திய மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு புதுவை உட்பட இந்தியாவின் 16 மாநிலங்களுக்கு மே மாதம் 10ஆம் திகதி நடைபெறும் ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகிறது.



தேர்தல் பிரசாரம்.

இதன்படி தமிழ்நாடு, புதுவையில் இன்று காலை 10 மணிக்கு வேட்பு மனு தாக்கல் தொடங்கி 23ஆம் திகதி முடிவுறும் 26ஆம் திகதி வரை வேட்பு மனுக்களை திரும்ப பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளுக்கும், புதுவையில் உள்ள 1 தொகுதிக்கும் மே 10ஆம் திகதி தேர்தல் நடைபெறும். 13ஆம் திகதி இந்தியா முழுவதும் ஓட்டுகள் எண்ணப்பட்டு அன்றைய தினம் முடிவுகள் அறிவிக்கப்படும். இந்திய மக்களவைக்கான தேர்தல் வரும் 20, 22, 26, மே 5, 10 ஆகிய தினங்களில் ஐந்து கட்டமாக நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

தமிழ் நாட்டில் வேட்புமனு தாக்கல் தொடங்கும் முன்னரே தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள், முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

# மீள்குடியமர்ந்த மக்களை அச்சுறுத்த சரசாலையில் மர்மக்குழுவினர் முயற்சி!

## -படைத்தரப்பினர் மீது சந்தேகம்

(வடமராட்சி)

தென்மராட்சியின் சரசாலைப் பகுதியில் இரவு வேளைகளில் நடமாடி வரும் மர்மக்கும்பல் ஒன்றினால் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்ச உணர்வு தோன்றியுள்ளது. குறிப்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் படையினர் விலக்கப்பட்ட மக்கள் குடியிருப்புப்பகுதிகளை மையமாக வைத்தே இக்கும்பல் நடமாடி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இக்கும்பல் கொள்ளையிடும் நோக்கில் மட்டுமே செயற்படுகின்றதா என உறுதியாகத் தெரியவில்லையெனவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே சரசாலையின் கனகன் புளியடிச்சந்தியை அண்டிய பகுதியிலுள்ள வீடொன்றினுள் இவ்வார முற்பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாகவும் அப்பகுதி மக்களிடையே பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது. கொள்ளையில் ஈடுபட்ட கும்பலை விழித்துக் கொண்ட வீட்டின் உரிமையாளர் துரத்திப்பிடிக்க முற்பட்டதாகவும் அவ்வேளையில் கொள்ளையர்கள் துப்பாக்கியால் சுட்டு விடப்போவதா கொச்சைத்தமிழில் எச்சரித்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் இப்பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களையடுத்து பெருமளவிலான மக்கள் குடியிருப்புக்களை படையினர் ஆக்கிரமித்து முகாமிட்டிருந்ததும் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து அவற்றில் இருந்து வெளியேறியிருந்ததும் அவ்வாறு வெளியேறிய படையினர் கனகன் புளியடிச்சந்திப்பகுதியில் பாரிய படைத்தளமொன்றை அமைத்து தற்போது நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (27)



வவுனதீவில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மட்டு–அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ்.

# ஹமாஸ் இயக்கத்தலைவரின் கொலைக்கு பழிவாங்கப் போவதாக பின்லேடன் அறிவிப்பு

பலஸ்தீன ஹமாஸ் இயக்கத் தலைவர் அகமத் ஜாஷீனை கொலை செய்தமைக்காக இஸ்ரேல் மீது பதிலடி நடத்தப் போவதாக அல்ஹைதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் எச்சரித்துள்ளார்.

அல் ஜசிரா தொலைக்காட்சி சேவையூடாக நேற்று இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் இஸ்லாமியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் அந்த நாடுகள் பாரிய எதிர் விளைவுகளைச் சந்திக்க நேரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# கிளி.யில் 8 மணி நேரத்தில் 4 விபத்துக்கள்; 7 பேர் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சியின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் நேற்றைய தினம் நான்கு வீதிவிபத்துகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

முதலாவது விபத்து காலை 11.00 மணிக்கு காக்கா கடைச்சந்தியில் வீதியைக்கடக்க முற்பட்டவரை பின்னால் வந்த உந்துருளி மோதியது. இதன் போது உந்துருளியில் பயணித்தவரும் ஈருருளியில் வீதியைக் கடக்க முற்பட்டவரும் சிறுகாயமடைந்தனர்.

இரண்டாவது விபத்து மதியம் 12.30 மணிக்கு கிளி.மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் முன்பாக நடைபெற்றது. இதில் உந்துருளி ஒன்று வீதியைக்கடக்க முற்பட்ட முதியவரை மோதியது. இதன்போது இருவரும் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது விபத்து கிளி.பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது. கிளி.பேருந்து நிலையத்தின் முன்பாக வீதியில் தார் ஊற்றப்படாத பகுதியில் இருந்து தார் ஊற்றிய பகுதி வீதியில் ஏற முற்பட்ட போது அதில் இருந்த சிறிய ஏற்றத்தைக் கருத்திற் கொள்ளாது வேகமாக வந்து ஏறியதனால் உந்துருளி சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் வீதியில் சரிந்தது. அவ்வேளை உந்துருளி ஓட்டுனர் மீது பின்னால் வந்த உந்துருளி ஏறியது. இதனால் அவர் காயமடைந்தார். இவ்விபத்து பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றது.

நான்காவது விபத்து நேற்று மாலை ஏழு மணிக்கு பளைப்பகுதியில் இடம்பெற்றது. இதில் வீதியைக் கடக்க முற்பட்ட 54 வயதுடைய க.லட்சுமி (குணசிங்கபுர கொழும்பு) என்ற பெண்மணியை எதிரே வேகமாக வந்த உந்துருளி மோதியது. இதன்போது உந்துருளியை ஓட்டி வந்த எ.ஜெகதீஸ்வரன் (வயது 27), க.லட்சுமி ஆகிய இருவரும் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் கிளி. மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ.தீ)

## - பருத்தித்துறை கடற்பரப்பில் -

# மீனவரை படகுடன் இழுத்துச்சென்று சிறில.கடற்படையினர் மிரட்டல்

பருத்தித்துறையில் உள்ள முனைக்கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சில கடற்தொழிலாளர்களை கடற்படையினர் பலவந்தமாக இழுத்துச்சென்று அச்சுறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது. பருத்தித்துறை கடற்பரப்பில் மூன்று படகுகளில் சென்று வழமை போல பிரஸ்தாப கடற்தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை விசைப்படகுகளில் வந்த கடற்படையினர் படகுகளில் வெளிச்சத்தைப் பொருத்தவில்லை. என்பதைக் காரணம் காட்டி அச்சுறுத்தியதுடன் அவர்களின் படகுகள் மூன்றையும் தமது விசைப்படகுகளில் கட்டினர். பின் அவற்றைத் தூரத்திற்கு இழுத்துச்சென்று மிரட்டிய பின் விடுவித்துள்ளனர். படையினரின் இவ் அச்சுறுத்தல்கள் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழு மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

# பிரச்சாரம் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக பிற்போடப்பட்டிருந்த வடமேல் மாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மீண்டும் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பத்து இரண்டு மாகாண சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையிலேயே இந்தத்தேர்தல் இடம்பெறவுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் ஒன்பது அரசியல் கட்சிகளும் ஆறு சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடும் அதே வேளை குருநாகல் மாவட்டத்திலிருந்து ஆறு அரசியல் கட்சிகளும் ஒரு சுயேட்சைக்குழுவும் தேர்தலில் போட்டியிடவுள்ளன. (32)

## அமைச்சுக்கள்...

இதேவேளை, இன்றும் அமைச்சர்கள் பொறுப்பேற்பிற்கு சாத்தியமில்லையெனத் தெரிய வருகிறது. நாளைய தினம் கண்டியில் சனாதிபதியை ஜே.வி.பி. உறுப்பினர்கள் சந்தித்து இது தொடர்பாக விவாதிக்கவுள்ளனர். திங்கட்கிழமைக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜே.வி.பி. கோரிய அமைச்சுக்களில் சில துறைகள் உள்ளடக்கப்படவில்லை. இது குறித்த ஜே.வி.பி.யின் ஆட்சேபனைக்கு சிறிலங்கா சுதந் திரக் கட்சி கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றது. அத்தோடு,அமைச்சுக்களை கண்காணிக்கக் குழுவொன்றை நியமிக்க வேண்டும். அமைச்சர்கள் தங்களது மனைவி மார்களை செயலாளர்களாக வைத்திருக்கக் கூடாது என்கின்ற ஜே.வி.பி.யின் கோரிக்கைகளும் சுதந்திரக் கட்சியால் தற்போது ஏற்கப்படாத நிலையில் இருக்கின்றன.

இந்த விடயங்கள் ஏற்கனவே, இரு கட்சிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இருப்பதனால் அதனை நடைமுறைப்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி மறுத்து வருவதால் முரண்பாடுகள் வலுவடைந்து வருகின்றன.திங்கட்கிழமைக்குள் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் இது பாரிய பிரச்சினையாக உருவெடுக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

## நாடாளுமன்றக்குழு....

பட்டு அங்கு ஒன்று கூடலுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் முன்னாள் பிரதமமந்திரி சிறிமாவோ பண்டார நாயக்கவின் பிறந்ததினம் என்பதால் அது தொடர்பிலும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## பேச்சுக்களை...

உயர்அதிகாரத்தை நிலையாட்டியுள்ளனர். தாம் இந்த மாத இறுதிப் பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்போவதாக சனாதிபதி புதுவருடத்துக்கு முன்னர் அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின்பவலிடம் தொலைபேசியின் மூலம் அறிவித்திருந்தார். இராஜதந்திரிகள் இதனை சனாதிபதியின் அதீத நம்பிக்கை எனக் கூறுகின்றனர்.

பாதுகாப்புத்துறை ஆய்வாளரான ஹரி குணதிலக்க இது தொடர்பில் கூறுகையில் சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையில் இருந்து இலங்கை தற்சமயம் கீழ் இறங்கி நிற்கிறது. அதேநேரம் புதிய அரசாங்கத்தின் நிலையைக்கொண்டு விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பில்லை என்றே கருத வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## தளபதி...

புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டது.

இதில் பொதுச்சுடரினை அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். லெப்.கேணல் நீலன் அவர்களின் வித்துடலுக்கு அவரது துணைவியார் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து நீலன் அவர்களின் தாயார் வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்தார். வீரவணக்க உரையை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் நியூட்டன் விடுதலைப்புலி களின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி யில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லத்துக்கு எடுத்துவரப்பட்டு தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் பொதுமக்கள் ஆகியோரின் இறுதி வணக்கத்துடன் பூரண இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

நிகழ்வில் தளபதிகளான, கேணல் பால்ராஜ், கேணல் சூசை, கேணல் ஆதவன், கேணல் ஜெயம், கேணல் தீபன், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா ஆகியோருடன் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (லோ,தீ)

## பொலநறுவையில்....

இவர்கள் இரவு ஆகாரம் உட்கொண்ட போது குறிப்பிட்ட விருந்தகத்தின் வரவேற்பு கதவுகள் மூடப்பட்டதாகவும் ஆங்கில ஊடக இதழ் தெரிவித்துள்ளது.

இதேவேளை முரளிதரன் விநாயகமூர்த்தி எனப்படும் கருணா வெளிநாடுஒன்றுக்கு சென்றமை தொடர்பில் எவ்விதமான பதிவுகளும் கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புரிந்துணர்வு...

துறைப்பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலக பிரதிச்செயலாளர், பவானந்தன் தளபதிகளான நாகேஷ், ரமணன்,ஜெயார்த்தன்,ஆகியோரும் சிறிலங்கா இராணுவத்தரப்பில் மின்னேரியாவில் உள்ள 23 ஆவது படைப்பிரிவு பிரிகேடியர் வஜிரவிஜய குணவர்த்தன மட்டக்களப்பு 233 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்ஸ்சிறி அமரதுங்கவும் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பின் இறுதியில் சிறிலங்கா இராணுவத்தினரும் தமிழீழ விடுதலை புலிகளும் கூட்டாக ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் தரப்பில் விசேட தளபதி ரமேஸ் இராணுவத்தரப்பில் பிரிகேடியர் விஜயகுணவர்த்தன ஆகியோர் கையொப்பம் இட்டு வெளியிட்டுள்ளனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதென்றும் மாதம் ஒருமுறை சந்தித்துப்பேசுவது என்றும் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை இரண்டு தரப்பும் மதித்துச்செயற்படுவதென்றும் முடிவுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்...

மாவட்ட புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப். கேணல் நீலன் அவர்களின் வித்துடல் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது அங்கு அஞ்சலி உரை நிகழ்த்துகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; லெப். கேணல் நீலன் 1984ம் ஆண்டு தனது 19வது வயதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளின் ஐந்தாவது பயிற்சிப் பாசறையில் தனது பயிற்சியை பெற்றார். அன்றைய நாளில் இருந்தே கருணாவுடன் ஒன்றாக புலனாய்வுப் பணியை மேற்கொண்டார். கருணாவுடன் அன்று தொடக்கம் ஒன்றாக நின்று பணியாற்றிய ஒரேவயதுடைய இவருக்கும் கருணாவிற்கும் இடையில் பொறுப்பாளர் என்பதைவிட புரிந்துணர்வு அடிப்படையிலான நட்பு அந்தக்காலத்தில் இருந்தே இருந்து வந்தது. ஆனால் நீலன் ஒரு உறுதியான போராளி தேசியத்தின் பற்றுதலுடனும் தலைமையின் மீது உறுதியுடனும் செயற்பட்டுவந்தார். இந்தநிலையில் கருணாவின் நட்புக்கு மேலாக அவர் தேசியத்தை நேசித்தார். அதனால் கருணாவால் இவரை தன்வசம் ஈர்த்துக் கொள்ளமுடியவில்லை இறுதிவரை கருணாவுடன் நெருங்கிய நட்புடனேயே இருந்தார். கருணா பலதளபதிகளுக்கு சலுகைகளை வழங்கி தன்வசம் ஈர்த்தார் ஆனால் நீலன் அத்தகைய சலுகைகளுக்காக தமிழ்தேசியத்தை விற்காது உறுதியாக இருந்தார்.

இந்நிலையில் மட்டுமாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் விடுதலைப்புலிகளால் இங்கு அழைக்கப்பட்ட நிலையில் கருணா நீலனைத் தொடர்பு கொண்டு புலனாய்வுத்துறை போராளிகளை ஒழுங்குபடுத்தி சந்திப்பொன்றுக்காக தருமாறு கட்டளையிட்டிருந்தார். கருணாவின் நயவஞ்சக நோக்கைப் புரிந்துகொண்டு வன்னி சென்ற மாவட்ட பொறுப்பாளர் வந்தவுடன் சந்திப்பை ஒழுங்குபடுத்தலாம். அதுவரை பொறுமையாக இருங்கள் என்றுகூறி சந்திப்பை ஒழுங்குபடுத்தாது தட்டிக்கழித்துவந்தார்.

பின்னர் பொறுப்பாளர் வந்தவுடன் கருணாவால் இவர்கள் அனைவரும் எதிரியால் எவ்வாறு சிறைப்பிடிக்கப்படுவார்களோ அவ்வாறு இவர்களது ஆயுதங்கள் அனைத்தும்பறிக்கப்பட்டு மக்கள் முன்னிலையில் கைகளை உயர்த்தியவாறு கூட்டிச்செல்லப்பட்டு அவரது முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர். அதில் பல போராளிகள் ஒதுங்கிருந்த தளபதிகளின் உதவியுடன் தப்பிவந்தனர். நீலன் தனக்கு உடன்படவில்லை என்ற காரணத்தால் பழிவாங்கினார். கருணாவின் துரோகத்தனம் நீலனை இத்தகைய நிலைக்கு உருவாக்கியதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். நீலன் கைகள் கட்டப்பட்டுச் சுடப்பட்டார். நீலன் பலசமர்க்களங்களை சந்தித்தவர் அதேபோல இராணுவ, புலனாய்வுரீதியாக மட்டக்களப்பில் பணியாற்றினார்.இவர் எந்தக் காலத்திலும் தமிழ் தேசியத்துக்கு உறுதியானவராக இருந்தார்

கருணாவால் நீலன் கொலை செய்யப்பட்டதன் பின்னர் இவருடன் கருணா சிறைவைத்திருந்த ஒருவரை சந்தித்தபோது நீலன் தலைமையிடம் கூறுமாறு கூறிய செய்தியை எம்மிடம் கூறினார். "கருணா என்னை தனது தலைமையின் கீழ் இருந்து வேலை செய்யுமாறு தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறார் அவருக்கு கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. துரோகியின் கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. அதைவிட நான் சாவதற்குத் தயாராக இருக்கிறேன். இந்தத் தகவலை எமது தலைமையிடம் தெரியப்படுத்துங்கள்" என்றுதான் தலைமை மீது உறுதியாக உள்ளதை அவரிடம் கூறிவிட்டு சிறையில் இருந்தார். இத்தகைய உறுதிமிக்க போராளியை கருணா வஞ்சகமான முறையில் கொலை செய்துவிட்டார். என்றார். (லோ,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது